**தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன வளிமண்டலவியல் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வளிமண்டலவியல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதகைமையினை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2.1 |
| | | 2. | பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.2 |
| | | 3. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| | | 4. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.6 |
| | | 5. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.9 |
| | | 6. | மனிதவள முகாமைத்துவம் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | இணங்காமைகள் | 2.10 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3(ஆ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை | 2.1.1 |
| 218(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.8 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

திணைக்களத்தினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக்கமைய செயற்பட்டவாறு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 27.8 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 26.48 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.1 பெறுகைகளை திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) வழிகாட்டிக்கு முரணாக 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவர் வளிமண்டலவியல் உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள், எழதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாட்டு பெறுவனவுகளுக்கான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவராகவும் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினதும் சிறு பெறுகைகள் குழுவின் பதிலீட்டு அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.1(அ) வழிகாட்டிக்கமைய குழுக்களின் செயலாளர்களால் ஒவ்வொரு கூட்டமும் நடாத்தப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் தொடர்பில் அங்கத்தவர்களுக்கு முன்கூட்டி அறிவிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டிக்கமைய அறிக்கைப்படுத்தல் பணிகளுக்காக அங்கத்தர்களின் வருகைப் பதிவேடொன்று, குழுவின் செயலாளரால் பேணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.12 வழிகாட்டிக்கமைய பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தர்வர்களால் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய உரைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டம் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிராததுடன், அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டிக்கமைய விரிவான பெறுகைகள் திட்டம் அந்த மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (உ) வழிகாட்டிக்கமைய பிரதான பெறுகைகள் திட்டம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் உரிய

முறையில் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(எ) பெறுகைகள் திட்டத்திற்கமைய தலைமை அலுவலகத்தின் பழுதுபார்த்தலாக 2017 நவம்பர் 30 ஆந் திகதி அளவில் நிறைவுசெய்யப்பட வேண்டிய போதிலும், 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

---

**(அ) 100 தன்னியக்க மழைமானிகளை கொள்வனவு செய்தல்**

---

மீளாய்வாண்டினுள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்படாத ரூபா 37,052,905 பெறுமதியான தன்னியக்க மழைமானிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைக்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டிக்கமைய தேசிய போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்படாது அதன் 3.3 வழிகாட்டிக்கமைய உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த நடைமுறையை தெரிவு செய்வதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட நியமங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ii. கேள்வி கோருவதற்கு முன்னர் அமைப்புக் குறியீடுகள் தொடர்பில் கலந்துரையாடி பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பெறுகை ஆவணங்களை வெளியிட்டதன் பின்னர் அமைப்புக் றியீடுகள் மாற்றப்பட்டிருந்தன.

iii. கங்காதார வில் பொருத்துவதற்காக தன்னியக்க மழைமானிகளை கொள்வனவு செய்ய முன்னர் தளப் பரிசோதனை மேற்கொண்டு பொருத்தும் இடம் தீர்மானிக்கப்பட்டிராததுடன், கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் பொருத்துவதற்கான இடம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

iv. பெறுகை அறிவித்தல் மற்றும் அறிவுரைகளின் தாளின் 8.3 ஆம் பந்தியின் பிரகாரம் முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைகள் பொறுப்பேற்கப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளில் முத்திரை பொறிக்கப்படாது இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன், கேள்வி திறத்தல் குழுவினதும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

v. தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கைக்கமைய 2017 திசெம்பர் 21 ஆந் திகதி போட்டி நிறுவனங்களின் விலைக்கேள்விகளில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தகுறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தாது 100 தன்னியக்க மழை மானிகளை கொள்வனவு செய்வதற்கு 2017 திசெம்பர் 22 ஆந் திகதி கூடியுள்ள திணைக்களத்தின் பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

vi. விலைக்கேள்வி கோரல் ஆவணங்களினதும், விலைக்கேள்வியாளர்களுக்காக வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல் கடிதத்தின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தன்னியக்க மழைமானிகளை விநியோகித்தல் தொடர்பிலான அனுபவம் தொடர்பில் எழுத்து மூல சான்றிதலொன்று இல்லாது

வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும், விலைக்கேள்வி கோரல் பதிவேடுகளில் 7.3 ஆம் பந்திக்கமைய ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையொன்றும் 2018 யூன் 14 ஆந் திகதி வரையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

vii. விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொது நிபந்தனை 11.1 ஆம் பந்திக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பொருட்களின் வழங்கள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அத் திகதி வரையிலும் எந்தவொரு மழைமானியும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

viii. விலைக்கேள்வி ஆவணங்களின்பொது நிபந்தனை இலக்கம் 2.2 ஆம் பந்திக்கமைய மழைமானிகள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் பெறுமதியில் 60 சதவீதத்தினை செலுத்த முடியுமான போதிலும், திணைக்களத்திற்கு மழைமானி உபகரணங்கள் கிடைத்திருக்காத போது, அதற்காக மொத்த தொகையான ரூபா 37,052,905 இனை செலுத்துமாறு, 2017 திசெம்பர் 28 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஆவணங்களிற்கமைய அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வளிமண்டவியல் உபகரணங்களை கொள்வனவு செய்தல்**

ரூபா 5,730,963 பெறுமதியான வளிமண்டலவியல் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தகைமைகள், முன் செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை தொடர்பான தகவல்கள் வழங்குநர்களால் வழங்கப்பட்டிராததுடன், அது தொடர்பில் பெறுகைக் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வாகனப் பயன்பாடு**

திணைக்களத்திற்கு சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் 08 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் 116,425 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 1,436,601 மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 802,910 உள்ளடங்கலாக மோட்டார் வாகன பராமரிப்பு பணிகளுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 3,208,473 கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய திணைக்களத்தினால் வளாகத்தின் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோ மீட்டருக்காக ரூபா 28 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

திணைக்களத்தினால் ஏனைய பல்வேறு நிறுவனங்களுக்குரிய வாளாகத்தில் நடாத்திச் செல்லப்படும் திணைக்களத்தின் 21 பிரதேச அலுவலகங்களின் காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### டொப்லர் ரேடார் கட்டமைப்பு

2006 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவிற்கமைய டொப்லர் ரேடர் கட்டமைப்பொன்றினை தாபிப்பதற்காக ஆகக்கூடியது ரூபா 400 மில்லியன் முதலீடு செய்வற்கு அரசு தீர்மானித்திருந்தது. 2007 மற்றும் 2008 ஆகிய வருடங்களின் இறுதியளவில் இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் உலக வளிமண்டலவியல் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியிலிருந்து ரூபா 320 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பில் திணைக்களத்தினால் 2010 மார்ச் 12 ஆந் திகதி 23 மீட்டர்கள் நீளமான மற்றும் 50 மீட்டர்களை நீளமான நுழைவுப் பாதையொன்று ரூபா 60,452,000 தொகை கிரயத்தில் தெனியாய பிரதேசத்தில் நிர்மாணித்தல் மற்றும் பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை அலுவலகத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் இந்த நாட்டிற்கு கிடைத்திருந்த ரேடார் கட்டமைப்பு 2014 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்டிருந்த போதிலும், நீண்டகாலமாக விளைவற்றுக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமையால், செயலிழந்து காணப்பட்டது. 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் உலக வளிமண்டலவியல் அமைப்பின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் தொடர்ந்தும் எஞ்சியிருந்த பணத்தை பயன்படுத்தி ரேடார் கட்டமைப்பினை பழுதுபார்ப்பதற்காக வழங்குனர் இணங்கியருந்தார். அதற்கமைய இயந்திரத்தின் பகுதிகளின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் உற்பத்திக் கம்பனியொன்றுக்கு 2017 ஏப்ரல் 21 ஆந் திகதி வரையிலும் கப்பலேற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 5,644,398 தொகையான மேலதிகக் கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் அது மீண்டும் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவ நலிவுகள்

தன்னியக்க வளிமண்டலவியல் நிலையங்கள் 37 நாடெங்கிலும் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 15 நிலையங்களில் மாத்திரம் வானிலை தரவுகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்தவாறு உள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், திணைக்களத்திற்குரிய 521 மழைவீழ்ச்சி அளவீட்டு நிலையங்கள் நாடெங்கிலும் வியாபித்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டினுள் தொடர்ச்சியாக 35 நிறுவனங்களிலிருந்து தகவல் கிடைத்திருக்கவில்லை.

## 2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 180.65 | 180.00 | 0.65 | 0.35 |
| | மூலதனம் | 69.28 | 67.14 | 2.14 | 3.09 |
| | மொத்தம் | **249.93** | **247.14** | **2.79** | **1.12** |
| **2014** | மீண்டுவருபவை | 206.73 | 206.53 | 0.20 | 0.09 |
| | மூலதனம் | 83.79 | 72.91 | 10.88 | 12.98 |
| | மொத்தம் | **290.52** | **279.44** | **1108.** | **3.81** |
| **2015** | மீண்டுவருபவை | 25518. | 24853. | 6.65 | 2.62 |
| | மூலதனம் | 34800. | 111.53 | 23647. | 67.95 |
| | மொத்தம் | **60318.** | **36006.** | **24312.** | **40.30** |
| **2016** | மீண்டுவருபவை | 26830. | 25609. | 1221. | 4.55 |
| | மூலதனம் | 7320. | 50.78 | 2242. | 30.62 |
| | மொத்தம் | **34150.** | **306.87** | **34.63** | **10.14** |
| **2017** | மீண்டுவருபவை | 260.88 | 254.98 | 5.90 | 2.26 |
| | மூலதனம் | 6250. | 4952. | 12.98 | 20.76 |
| | மொத்தம் | **32338.** | **304.50** | **18.88** | **5.84** |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

சிறந்த கற்கையொன்றில்லாது நிதியேற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால், 03 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 12,047,525 தொகையான நிதியேற்பாடு 26 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சினுள் சேமிப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.00 | 9.20 | 8.00 | 9.05 | 55.00 | 29.76 |

**நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றிற்கமைய அத்திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த சேவையைக் கைவிட்டுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதி ரூபா 143,072 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

## 2.8 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் மீதான 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 8.99 மில்லியனாகும். அந்த வைப்புக்களில் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 225,872 கூட்டுத்தொகையான 43 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் 11 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பிணை வைப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வாகனங்களை நிரப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.10 இணக்கமின்மைகள்

### 2.10.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

உலக வளிமண்டலவியல் அமைப்பின் வழிகாட்டிக்கமைய வளிமண்டலவியல் நிலையமொன்றின் உபகரண பெட்டி 25x25 மீட்டர்கள் அளவின் தாபிக்கப்பட வேண்டும். எனினும், காலி

நகரிலமைந்த நிலையத்தில் 12x9 மீட்டர்கள் அளவிலான மற்றும் ஹம்பாந்தோட்டை நிலையத்தில் 16x12 மீட்டர்கள் அளவிலான உபகரணப் பெட்டிகள் தாபிக்கப்பட்டிருந்தன.

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**2.11.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 202,999,636 செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 54 | 43 | 11 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 29 | 09 | 20 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 238 | 201 | 37 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 139 | 129 | 10 |
| | **மொத்தம்** | **460** | **382** | **78** |